City of Mississauga
300 City Centre Drive
Mississauga, ON L5B 3C1

# News Release

mississauga.ca facebook.com/citymississauga twitter.com/citymississauga

**இந்த தீபாவளி பண்டிகையை பாதுகாப்புடன் கொண்டாடுங்கள்: விதிமுறைகளைப் பின்பற்றி பாதுகாப்புடன் பட்டாசுகள் கொளுத்துங்கள்**

*தீபாவளி பண்டிகை என்பது ஒவ்வொருவருக்கும் வேடிக்கை நிறைந்ததாகவும் பாதுகாப்பாக இருப்பதையும் உறுதி செய்ய உதவுங்கள்.*

பெரும்பாலும் ஒளிக்கான விழா எனக் குறிப்பிடப்படும் இந்த தீபாவளி பண்டிகை நெருங்கி வரவிருக்கிறது; Mississauga எங்கிலுமாக இருக்கும் குடும்பத்தினர் இந்தப் பண்டிகையைக் கொண்டாடத் தயாராகி வருகிறார்கள். இருளை வெற்றிகொண்ட நாளாகக் கருதப்படும் இந்த விடுமுறை நாளில், வண்ணமயமான விளக்குகள், மெழுகுவர்த்திகள், லாந்தர் விளக்குகள், சிறப்பான உணவு மற்றும் பட்டாசுகள் கொளுத்துவது ஆகியவற்றுடன் இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது.

இந்த விடுமுறை நாளுக்காக தயாராதல் நடைபெற்றுவரும் இவ்வேளையில், பாதுகாப்பையே முன்னுரிமை கொண்ட விஷயமாகக் கருதி, அக்கம்பக்கத்து வீட்டாரிடம் நற்பெயர் பெறும் வகையில் பாதுகாப்புடனும் ஒவ்வொருவரும் மகிழ்ந்து அனுபவிக்கும் வகையிலும் கொண்டாடுமாறு குடியிருப்புவாசிகளுக்கு Mississauga நகர நிர்வாகம் கேட்டுக்கொள்கிறது.

**பட்டாசுகொளுத்துதல்**

நகரின் பட்டாசுகொளுத்துவது பற்றிய உப சட்டத்தின்படி, தீபாவளி பட்டாசுகொளுத்துதலானது அவரவர் சொந்த கட்டிடங்களில் அமைந்த வீடுகளுக்குள் நவம்பர் 1 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மட்டும் சூரியன் மறையும் நேரத்திலிருந்து இரவு 11 மணி வரை பட்டாசுகள் கொளுத்தி மகிழ அனுமதிக்கப்படுகிறார்கள். பொதுமக்கள் நடமாடும் தெருக்கள் அல்லது பூங்காக்களில் அல்லது நவம்பர் 1 ஆம் தேதியல்லாத ஏதேனும் நாளில் இப்படிச் செய்ய நீங்கள் நகர நிர்வாகத்திடம் உரிமம் பெற வேண்டும்.

பட்டாசுகளைக் கொளுத்தும்போது:

- ஒவ்வொரு பட்டாசு பாக்கெட் மீதும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் எச்சரிக்கைகளை முழுமையாகப் படித்து புரிந்துகொள்ளுங்கள்.
- பார்வையாளர்கள் மற்றும் பாதசாரிகள் ஆகியோர், பட்டாசுகள் கொளுத்தும் இடத்தில் இருந்து பாதுகாப்பான ஒரு தூரத்தில் இருப்பதை உறுதி செய்யுங்கள்.
- குழந்தைகளை எந்நேரமும் கண்காணித்தபடி இருங்கள்.

- உபயோகித்த அல்லது உபயோகித்திருக்காத பட்டாசுகளை அப்புறப்படுத்தும் முன்னர் அவற்றை இரவு முழுவதுமாக தண்ணீரில் முழுமையாக அமிழ்த்தி நனைய விடுங்கள். நனைந்து ஈரமாகிய பட்டாசுகளை ஒரு பிளாஸ்ட்டிக் பையில் இட்டு குப்பைத்தொட்டியில் இடுங்கள்.

பட்டாசுகள் கொளுத்தப்படக் கூடும் என்ற விடுமுறை நாட்களில், அதிக கண்காணிப்புக்காக கூடுதல் சட்ட அமலாக்க அதிகாரிகளின் எண்ணிக்கையை நகர நிர்வாகம் அதிகமாக்குகிறது; இதன்மூலம் புகார்கள் ஏதும் வந்தால் உடனடி செவிசாய்ப்புக்கு ஏதுவாகி கொண்டாட்டங்கள் பாதுகாப்புடன் நிகழ்வதை உறுதிசெய்ய உதவுகிறது. கடந்த காலங்களில் சட்டத்திற்குப் புறம்பான வகையில் பட்டாசுகளைக் கொளுத்தி பிரச்சனைகளை உண்டாக்கிய இடங்களை இனம் கண்டு அங்கெல்லாம் சட்ட அமலாக்க அதிகாரிகள் இருந்தபடி பீல் பிராந்திய போலீசுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

சட்டத்திற்குப் புறம்பான வகையில் பட்டாசுகளைக் கொளுத்துவது பற்றிய புகார்களைச் சம்ர்ப்பிக்க mississauga.ca/fireworks க்கு வருகை தரவும் அல்லது 311 ஐ அழைக்கவும். பட்டாசுகள் கொளுத்துவது பற்றி புகாரளிக்க தயவுசெய்து 911 ஐ அழைக்க **வேண்டாம்**; பட்டாசுகள் கொளுத்தியதன் காரணமாக யாரேனும் காயப்பட்டுவிட்டால் அல்லது தீப்பிடிக்கும் அபாயம் கண்டிப்பாக உள்ளது என்றால் மட்டுமே இதனை அழைக்கவும்.

**தீயிலிருந்து பாதுகாப்பு**

**விளக்குகள் மற்றும் அலங்காரங்கள்**
அலங்காரங்களை செய்யும்போது தீயிலிருந்து பாதுகாப்பு என்பதற்கு முன்னுரிமை கொடுப்பது முக்கியமாகும். அகல்விளக்குகள், மெழுகுவர்த்திகளை திடமாக பிடிமானம் இருக்கும் இடங்களில், அதுவும் தீப்பிடிக்காத பரப்புகளில் மட்டுமே வைக்கப்பட்டு எந்நேரமும் பெரியவர்களில் ஒருவர் கண்காணித்தபடி இருக்க வேண்டும். திரைச்சீலைகள் மேசை நாற்காலிகள், அலங்காரங்கள் மற்றும் ஆடும் வகையில் உள்ள துணிகள் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பான தூரத்தில் வையுங்கள்; அதே சமயத்தில் குழந்தைகள் மற்றும் செல்லப்பிராணிகளை சூடு மற்றும் தீச்சுவாலைகள் ஏற்படும் இடங்களை விட்டு தள்ளி வையுங்கள். அடைபட்ட இடங்களில் தீச்சுவாலைகள் பரவ போதுமான இடம் இருக்காது.

**சமைத்தல் மற்றும் சமையலறைப் பாதுகாப்பு**
தீபாவளிப் பண்டிகை என்பது நண்பர்களும் குடும்பத்தினரும் கூடி மகிழும் கொண்டாட்ட சமயமாகும்- பெரும்பாலும் இப்படிக் கூடுவது சாப்பாட்டு மேஜைகள் மற்றும்

City of Mississauga
300 City Centre Drive
Mississauga, ON L5B 3C1

MISSISSAUGA

# News Release

mississauga.ca facebook.com/citymississauga twitter.com/citymississauga

சமையலறைகளேயாகும். சமைத்துக் கொண்டிருக்கும்போது பாதுகாப்பை மனத்தில் இருத்துங்கள்:

- கவனத்தை சிதறவிட வேண்டாம்.சமையலறையைவிட்டு வெளியே செல்ல நேர்ந்தால், சூடாக்கும் சாதனங்களை அணைத்துவிடுவதை உறுதி செய்யவும்.
- அடுப்பின்மீதிலிருந்து துவாலைகள் மற்றும் துண்டுத்துணிகளை தூரமாக வைக்கவும்.
- உங்கள் கேரேஜ்-இல் வைத்து பார்பேக் சமைக்க வேண்டாம்.
- வீட்டுக்குள்ளாக உபயோகிக்க சமையல் கேஸ் நிரப்பிய, கையில் எடுத்துச் செல்லக்கூடிய அடுப்புகளை/சாதனங்களைக் கொண்டு செல்ல வேண்டாம்.
- எண்ணெய் இட்டு வறுக்கும்போதும் சமைக்கும்போது கவனமாக இருங்கள். சூடான-எண்ணை எளிதில் தீப்பிடிக்க வல்லது. தெர்மோஸ்டாட் கட்டுப்படுத்தி கொண்ட, அமிழ்த்தி வறுக்கும் சாதனத்தை உபயோகியுங்கள்; இது எண்ணெயில் இருக்கும் கொழுப்பை எளிதில் சூடேற விடாது.

ஒரு விடுமுறை நாளுக்காக திட்டமிடும்போது, உங்கள் திட்டங்களில் பாதுகாப்பு என்பது ஒரு முக்கிய அம்சமாக இருப்பதை உறுதி செய்யுங்கள்; பட்டாசுகளைக் கொளுத்தும் முன்னதாக உங்கள் குழும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் பேசி, ஆபத்தில் சிக்கக்கூடிய நபர்களை பாதுகாப்பாக இருக்க வையுங்கள்.

தீயை எப்படி முன்கூட்டி தடுப்பது என்பது பற்றிய மேலும் அதிக குறிப்புகளுக்கு, நகர நிர்வாகத்தின் தீ முன்தடுப்பு வலைப்பக்கத்தைப் பாருங்கள் மற்றும் Mississauga வில் பட்டாசுகளை உபயோகிப்பது பற்றி மேலும் அறிந்துகொள்ளவும் சட்டத்திற்குப் புறம்பான பட்டாசு கொளுத்துதல் பற்றிய புகார் அளிக்கும் செயல்முறை பற்றி அறியவும் mississauga.ca/fireworks க்கு வாருங்கள்.